**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,**
**ஜெயங்கொண்டம்.**
**C.C.No. 36/2020**

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் நாள் புதன் கிழமை அரசு தரப்பு சாட்சி–05, திரு.குப்பமுத்து என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் பிரமாணச்சட்டம் பிரிவு 4 ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.குப்பமுத்து | வயது | : | 53/26 |
| த.பெ. | : | காசிநாதன் | தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| ஊர் | : | தா.பழூர் காவல் நிலையம் | நிலை | : | PW05 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**( எதிரிகள் 1 முதல் 7 வரை ஆஜர் )**

**முதல் விசாரணை:**

1) நான் தற்போது தா.பழூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு.தினேஷ்குமார் என்பவரின் கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு தெரியும். இந்த வழக்கின் புகார்தாரர் எதிரிகளுடன் சமாதானமாகி விட்டபடியாலும், அரசு தரப்பு சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் சாட்சியம் அளித்துள்ளதாலும், இவ்வழக்கின் காலதாமதத்தை தவிர்க்கும்பொருட்டு, அவர் தயார் செய்து வைத்திருக்கும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த 13.07.2019ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் திரு.தினேஷ்குமார் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது, அரியலூர் அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலினைப் பெற்று, அங்கு சென்று, உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பாஸ்கர் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று, நிலைய குற்ற எண் 135/2019, ச/பி. 147, 148, 294(b), 324, 506(2) இதசவின்படி வழக்கு பதிவு செய்துள்ளார். **அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அதசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3)பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முத்துவேல், அரங்கநாதன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர் அதசாஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அதசாஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

4) பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில், குற்ற சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரிகளை தேடியபோது, 2வது எதிரி முனியமுத்து என்பவரை 14.07.2019ம் தேதி 15.00 மணிக்கு காரைக்குறிச்சி பஸ் ஸ்டாப் அருகில் வைத்து கைது செய்து, அவர் எவ்வித அச்சுறுத்தலும் தூண்டுதலும் இன்றி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் செல்வராஜ், வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து, அவரை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். 3வது எதிரி பிரபாகரன் என்பவரை 15.07.2019ம் தேதி 14.10 மணிக்கு கோட்டியால் பஸ் நிறுத்தம் அருகில் வைத்து கைது செய்து விசாரணை செய்தபோது, அவர் எவ்வித அச்சுறுத்தலும் தூண்டுதலும் இன்றி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் ரெங்கராஜன் மற்றும் மகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து, எதிரியிடமிருந்து Bajaj Pulsar 150 Red and Black Colour TN 68 M 8134 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை சாட்சிகள் ரெங்கராஜன் மற்றும்

மகேந்திரன் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து, வழக்கு சொத்தினை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். 1,4,5,6,7 எதிரிகள் மாண்புமிகு அரியலூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று பிணையில் சென்றுவிட்டார்கள். **3 வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.6 ஆகவும், கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.7 ஆகவும், படிவம் 91 அ.த.சா.ஆ.8 ஆகவும், இவ்வழக்கின் வழக்கு சொத்து சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

5) அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திருமதி.அன்புசெல்வி என்பவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிந்து, அவர் கொடுத்த விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ்கள் பெற்றார். **அந்த விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ்கள் முறையே அ.த.சா.ஆ.9 முதல் அ.த.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6) பின்னர் 1 முதல் 7 வரையிலான எதிரிகள் மீதான விசாரணையை முடித்து, 28.07.2019 ம் தேதி, எதிரிகளின் மீது ச/பி. 147, 148, 294(b), 324, 506(2) இதசவின்படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகளின் தரப்பில் கு/வி.**

அசா1 கொடுத்த பொய்யான புகார் வாக்குமூலத்தை பெற்று, சரிவர விசாரணை செய்யாமல், வழக்கு பதிவு செய்துள்ளார் என்றாலும், அந்த வழக்கு ஆவணங்கள் அனைத்தும் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றாலும், காவல் நிலையத்திலேயே தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கினை சரிவர விசாரணை செய்யாமல், இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2, 3 எதிரிகளை சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. அவர்களிடமிருந்து

எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரியல்ல.

/ உண்மை நகல் /

ஒம்/-ப.கனிமொழி,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,

ஜெயங்கொண்டம்.